**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 105 /20 வா.சா.1**

2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02-ம் நாள் செவ்வாய்கிழமை -ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: அய்யாச்சாமி | தந்தை பெயர்: கருத்தக்கவுண்டர் |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>02.12.2025</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

1ம் பிரதிவாதி வெள்ளையன் என்பவரின் மனைவி ஆவார் 2,3 பிரதிவாதிகள் வெள்ளையனின் வாரிசுகள் ஆவார்கள். 4ம் பிரதிவாதி சித்ராவிடமிருந்து கிரையம் பெற்ற நபர் ஆவார் . தாவாச் சொத்தின் சர்வே எண் 81/3 ஆகும் அதன் வீஸ்தீரணம் ஒரு ஏக்கர் 35 சென்ட் ஆகும் தாவா சொத்து வெள்ளையனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் . வெள்ளையனுக்கு தாவாச் சொத்து எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது அவர் அனுபவித்த சொத்தாகும் . வெள்ளையன் பெயரில் உள்ள சிட்டா அடங்கல் பார்த்தேன் . வெள்ளையனுக்கு தாவா சொத்து சம்பந்தமாக கிரைய பத்திரங்கள் எதுவும் இல்லை. நான் 09.04.1992 ல் கிரைய அக்ரிமெண்ட் போட்டேன். அந்தக் கிரைய அக்ரிமெண்ட் பதிவு இல்லாத பத்திரமாகும். வெள்ளையன் 1999 ஆம் வருடம் இறந்தார் என்று கேள்விப்பட்டேன் . நான் இந்த வழக்கை 2020 ஆம் வருடம் தாக்கல் செய்தேன். வெள்ளையன் உயிருடன் இருந்த காலத்தில் கிரையத்தை பதிந்து தரக்கோரி வழக்கறிஞர் அறிவிப்போ, காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை நான் நேரடியாக சென்று கேட்டதால் கொடுக்கவில்லை.லோகாம்பாள் எனது மாமியார் ஆவார். எனது மாமியார் வெள்ளையனிடமிருந்து சர்வே எண் 87/1 இ சொத்தை 1993 இல் கிரையம் பெற்றார். மேற்படி சொத்து வடக்குசொத்த்திற்கு வடபுறம் உள்ளது . வெள்ளையன் இறந்த பிறகு அவரது வாரிசுக்கு சொத்தை பதிந்து தரக் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை நான் நேரடியாக சென்று கேட்டேன். விற்பனை பத்திரம் பதிந்தால் மேற்படி விற்பனை பத்திரம் எத்தனை வருடம் செல்லும் என்றால் நான் எப்போது பதிந்து கொள்கிறேனோ அதுவரை செல்லும் . 08.04.1992 ல் கிரைய விற்பணை பத்திரம் பெற்றேன். யாரிடம் மேற்படி பத்திரத்தை வாங்கினேன் என்றால் பெயர் ஞாபகம் இல்லை 100 ரூபாய் பத்திரம் பெற்றேன். நான் பத்திரம் ஏற்படும் போது திருச்சியில் இருந்தேனா என்றால் இல்லை கன்னியாகுமரியில்

இருந்தேன்.பத்திரப்பதிவின் போதுநான் காணப்பட்டியில் இருந்தேன் . வா.சா.ஆ –1 விற்பனை ஒப்பந்த பத்திரத்தில் காணப்பட்டி விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான் . வெள்ளையன் காணப்பட்டியில் இருந்தார் . காணப்பட்டி திருப்பத்தூர் தாலுகாவை சேர்ந்தது . மேற்படி விற்பனை பத்திரத்தில் சாட்சிகளாக ஆண்டிச்சாமி நல்லதம்பி ஆகியவர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள் . அவர்கள் பூர்வீகம் காணப்பட்டி தொழில் ரீதியாக மணப்பாறையில் இருந்தார்கள். வா.சா.ஆ 1ல் மேற்படி நல்லதம்பி ஆண்டி சாமியின் முகவரி மணப்பாறை என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . விற்பனை பத்திரத்தில் தேதி 02.09. 1991 அன்று சீல் இடப்பட்டது என்றால் சரிதான் . தாவாச் சொத்தை பொருத்து 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு 14.08. 2020இல் பாக விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான் . 3ம் பிரதிவாதி சித்தரா 5. 10 .2020 இல் 4ம் பிரதிவாதி ராமனுக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான் மேற்படி இரண்டு பத்திரங்களும் பதிவு பத்திரம் என்றால் சரிதான் . மேற்படி இரண்டு பத்திரங்களும் ஏற்பட்ட ஏற்படுத்தப்பட்ட பின்பு தான் 09.10. 2020 இல் பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான் 4ம் பிரதிவாதி இராமன் இன்னொரு நபருக்கு 35 சென்ட் யை கிரையம் கொடுத்து விட்டார். தாவாச் சொத்து சம்பந்தமாக எனது அனுபவத்தை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கம் செய்யாததால் தாவா சொத்து என்னிடம் வெள்ளையன் ஒப்படைக்கவில்லை என்றால் நான் தாவா சொத்தில் ஒப்படைப்பு பெற்று மாமரம் வைத்து பராமரித்து வருகிறேன். தாவாச் சொத்திற்கு பட்டா தற்போது ராமன் பெயரில் உள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. தாவாச் சொத்தில் நான் அனுபவத்தில் உள்ளேன் நாலாம் பிரதிவாதி இராமன் மரத்தைவெட்டியதால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். மனு ரசீது பெற்றுள்ளேன். காவல் நிலையத்தில் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுமாறு கூறி விட்டார்கள் . காவல் நிலையத்தில் மரம் வெட்டியது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவாச் சொத்தானது 4ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டு 4ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்பதால் காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல நான் 1992 ஆம் வருடம் விற்பனை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளதால் மேற்படி விற்பனை ஒப்பந்தம் பத்திரத்தின் காலவரை முடிவடைந்து விட்டதால் தாவா வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. விற்பனை ஒப்பந்த பத்திரம் பதிவு இல்லாத பத்திரம் என்றாலும் தாவாச்சத்தை பொருத்து பதிந்து தர கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல 2012 க்கு முன்பு விற்பனை ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை தாவா சொத்தானது வெள்ளையனுக்கு பூர்வீக பாதிக்கப்பட்ட சொத்து என்பதால் தனிப்பட்ட முறையில் வெள்ளையனுக்கு கிரையம் கொடுக்க அல்லது விற்பனை ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்த எவ்வித

உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . நான் 1992 ல் காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். 2009 ஆம் வருடம் பணி ஓய்வு பெற்றேன் . விற்பனை ஒப்பந்த பத்திரம் வெள்ளையன் எழுதிக் கொடுக்கவே இல்லை என்றாலும் நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி மேற்படி விற்பனை ஒப்பந்த பத்திரத்தை மோசடியாக ஏற்படுத்தி உள்ளேன் என்றால் சரியல்ல . நான் தாவா வழக்கில் கோரி உள்ள 2,3 பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல . எனது விற்பனை பத்திரத்தில் எனது விலாசம் , கிரைய ஒப்பந்தம் கொடுத்தவர் விலாசம் மற்றும் சாட்சிகள் விலாசம் வெவ்வேறு ஊராக காண்பிக்கப்பட்டுள்ளதால் மேற்படி விற்பனை ஒப்பந்த பத்திரம் மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.